| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதி அறிக்கை தாக்கல்** | : | 21.02.2025 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 16.07.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 18.03.2025 | **விசாரணை காலம்** | : | 1 வருடம் 3 மாதங்கள் 28 நாட்கள் |

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்**

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.

**2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 16 –ம் தேதி, வியாழக்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 291/2025**

**CNR No. TNSA180006632025**

அரசுக்காக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், மேட்டூர் காவல் நிலையம்
**Cr. No. 24 of 2025 u/s 281, 125(b) of BNS** **...புகார்தாரர்**

**–எதிர்–**

**சண்முகம் (20/2026) த/பெ.வெங்கடாசலம், நெ.147/35, துறையூர், பி.என்.பட்டி, மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.** **..எதிரி**

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் **திருமதி.V.அனுராதா** அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.தீபக்ராஜா** அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

**வழக்கு விசாரணை விவரங்கள்**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கில் எதிரி கடந்த 12.02.2025ம் தேதியன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார். |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 21.02.2025 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 22.08.2025 | | |
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | 1.M.P.No.1/2026, Dated:12.03.2026 surrender petition filed and accepted.<br>2.M.P.No.2/2026, Dated:12.03.2026 70(2) CrPC petition filed and recalled.<br>3.M.P.No.4/2026, Dated:06.06.2026 348 BNSS petition filed and allowed. | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 09.09.2025 | 09.09.2025<br>01.07.2026 |
| | | | அ.சா.2 | 26.11.2025 | -- |
| | | | அ.சா.3 | 26.11.2025 | -- |
| | | | அ.சா.4 | 15.04.2026 | -- |
| | | | அ.சா.5 | 08.07.2026 | 08.07.2026 |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 13.07.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | பொருந்தாது | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை | | |

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:** இந்த வழக்கில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, கடந்த 14.01.2025ம் தேதி மாலை 05.15 மணியளவில் சாட்சி சரோஜா என்பவர் மாதாகோவிலில் இருந்து மேட்டூர் பேருந்து நிலையம் செல்லும் சாலையில் நாயுடு ஓட்டல் எதிரில் உள்ள நாச்சிமுத்து பூக்கடை முன்பு, இந்த விபத்தில் காயம்பட்ட சரோஜா எலுமிச்சை பழங்களை எடுத்துக் கொண்டு மேட்டூர் பேருந்து நிலையம் பக்கமிருந்து, மார்க்கெட் செல்ல நாயுடு ஓட்டல் எதிரில் உள்ள நாச்சிமுத்து பூக்கடை முன்பு ரோட்டின் ஓரமாக நடந்து சென்ற போது, அவருக்கு எதிரே மாதாகோவில் பக்கமிருந்து மேட்டூர் பேருந்து நிலையம் நோக்கி தெற்கில் இருந்து வடக்காக TN 52 X 9952 என்ற பதிவெண் கொண்ட Scooty Streak இரு சக்கர வாகனத்தை எதிரி சண்முகம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், எந்த ஒரு ஆரண் அடிக்காமலும் ஓட்டி வந்து சரோஜாவின் இடது காலில் மோதி விபத்து ஏற்படுத்தி, அந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால், மேற்படி சரோஜாவிற்கு இடது காலில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, இந்த வழக்கின் **எதிரி சண்முகம்** என்பவர் **பாரத நீதிச் சட்டம் பிரிவுகள் 281, மற்றும் 125(b)** ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல் செய்துள்ளதாக, மேற்படி **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார்** என்பவர் கடந்த **21.02.2025–ஆம்** தேதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட குற்ற வழக்கு இதுவாகும்.

2. இந்த வழக்கில் கடந்த **18.03.2025–ம்** தேதி, எதிரிக்கு எதிரான குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு **பாரத குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 230–ன் படி** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **21.06.2025 ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

3. அதன் பின்னர் கடந்த **22.08.2025** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி **பாரத நீதி சட்டம் பிரிவு 281 மற்றும் 125(b)** ஆகியவற்றின் கீழ் குற்றச்செயல்களை செய்துள்ளார்கள் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளி அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

4. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா. 1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:**

   a) **நிகழ்நிலை புகார்தாரர் சாட்சியம்:** இந்த வழக்கில் சுமார் 8 மாதங்களுக்கு முன்பு அசா.1 சரோஜா எலுமிச்சை பழம் விற்பதற்காக பழத்தை எடுத்துக் கொண்டு மால 5 மணியளவில் பேருந்தில் வந்து இறங்கி பேருந்து

நிலையம் அருகே உள்ள பூக்கடை முன்பு ரோட்டின் ஓரம் நடந்து சென்ற போது தனக்கு எதிரே இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்த எதிரி தன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அங்கிருந்தவர்கள் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு வந்து போலீசார் தன்னிடம் விசாரித்து எழுதி படித்து காண்பித்து கைரேகை வாங்கியதாகவும் விபத்திற்கு காரணம் எதிரி தான் என்று சாட்சியம் அளித்துள்ளார். புகாரில் உள்ள கைரேகை அவருடையதுதான்.

b) **நேரில் பார்த்த சாட்சி:** இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக சொல்லப்பட்ட அ.சா. 2 கண்ணன் சம்பவத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**c) பார்வை மகஜர் சாட்சிகள்:** பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 மோகன் மற்றும் அ.சா.4 நாச்சிமுத்து ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்திற்கு யார் காரணம் என்று தெரியாது எனவும், எதிரியை தெரியாது எனவும் போலீசார் கேட்டதால் கையொப்பம் செய்ததாகவும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

d) **மருத்துவ சிகிச்சை மற்றும் ஆவணங்கள்** : மேற்படி விபத்தில் காயமடைந்த சரோஜா என்பவர் அந்தியூரில் உள்ள ஸ்ரீ பாலாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். அங்கு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் வழங்கிய சான்று இந்த

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் இந்த விபத்து குறித்தும், அவருக்கு ஏற்பட்ட தாக்கங்கள் குறித்தும், அவரது காயங்களுக்கான காரணம் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

e) **முதல் தகவல் அறிக்கை:** இந்த சம்பவம் தொடர்பாக, மறுநாள் 15.01.2025–ஆம் தேதி, காலை 06.30 மணிக்கு, மேட்டூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேட்டூர் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அவர்கள் மருத்துவமனைக்கு சென்று மேற்படி அ.சா.1 சரோஜாவிடம் வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் அதன் அடிப்படையில் **மேட்டூர் காவல் நிலைய குற்ற எண். 24/2025** என்ற எண்ணில் **பாரத நீதிச் சட்டம் பிரிவுகள் 281 மற்றும் 125(b)** ஆகியவற்றின் கீழ் **அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்துள்ளார்.

f) **சம்பவயிட விசாரணை:** அதன்பின்னிட்டு வழக்கை புலன் விசாரணை எடுத்துக் கொண்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் கடந்த **15.01.2025–ஆம்** தேதி வழக்கின் சம்பவ இடம் சென்று, சம்பவயிட சாட்சிகளான **மோகன் மற்றும் நாச்சிமுத்து** ஆகிய இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ. 6 பார்வை மகஜர்** மற்றும் **அ.சா.ஆ. 7 மாதிரி வரைபடம்** ஆகியவற்றை தயார் செய்துள்ளார். மேலும் சம்பவயிட சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

g) **எதிரியின் கைது மற்றும் பிணை:** மேலும் இந்த வழக்கின் **எதிரி சண்முகம்** என்பவரை இந்த வழக்கில் **புலன் விசாரணை அலுவலர் செந்தில்குமார்** என்பவர் கடந்த **12.02.2025–ஆம்** தேதி கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

h) **மோட்டார் வாகன ஆய்வாளார் ஆய்வு:** மேலும் இந்த வழக்கின் புலன் விசாரணை அலுவலரின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்வு செய்து **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ. 8** வழங்கி உள்ளார். அந்த அறிக்கையில் இந்த விபத்தானது வாகனத்தில் ஏற்பட்ட ஏதேனும் இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என சான்று வழங்கியுள்ளார்.

**i) மருத்துவ சாட்சிகள்:** அ.சா.1 சரோஜாவுக்கு சிகிச்சை அளித்த மேட்டூர் அரசு மருத்துவமனை மருத்துவர் ராதாகிருஷ்ணன் மற்றும் அ.சா.1 சரோஜாவுக்கு மேல் சிகிச்சை அளித்த அந்தியூர் பாலாஜி மருத்துவமனை மருத்துவர் சண்முகசுந்தரம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

j) **இறுதியறிக்கை:** மேலும் இந்த வழக்கின் இறுதிக்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட **அ.சா.5 காவல் சிறப்பு உதவி ஆய்வளார் செந்தில்குமார்** என்பவர் கடந்த **12.02.2025–ஆம்** தேதி தனது புலன் விசாரணை முடித்து கடந்த **18.03.2025–ஆம்** தேதி இந்த வழக்கின் எதிரிக்கு எதிராக **பாரத நீதிச் சட்டம் பிரிவுகள் 281, மற்றும் 125(b)**

**ஆகியவற்றின் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.**

6. மேற்படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர், கடந்த **13.07.2026ம்** தேதி அரசு தரப்பு சாட்சியங்களில், **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 351(1) (ஆ)–ன் படி** எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து, படித்துக்காட்டி விளக்கிக் கூறி கேள்வி கேட்ட பொழுது, அவற்றை பொய்சாட்சி என தெரிவித்தார். ஆகவே எதிரி தரப்பு சாட்சி விசாரணை **15.07.2026**ம் தேதி முடிக்கப்பட்டது.

7. **இந்த வழக்கில் தீர்வளிக்கப்பட வேண்டிய எழுவினா யாதெனில்? அரசுத்தரப்பு, எதிரிக்கு எதிராக சுமத்தியுள்ள குற்றச்சாட்டை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதா? என்பதாகும்.**

## சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு

8. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு, எதிரித்தரப்பில் எந்தவித சாட்சியங்களும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ததன் அடிப்படையில், அரசுதரப்புச் சாட்சியங்களுக்கு எதிராக எதிரித்தரப்பில் அளித்துள்ள பதில்கள் மற்றும் எதிர்வாதங்களின் அடிப்படையிலும், இந்த நீதிமன்றம் கீழ்கண்ட சங்கதிகளாக இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிரூபணம் செய்யப்பட்ட சங்கதியாக முதற்கட்டமாக தீர்மானித்துள்ளது.

a) இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபராக குறிப்பிடப்படும் அ.சா.1 சரோஜா என்பவர் தனது சாட்சியத்தில் சம்பவத்தின் போது எலுமிச்சை பழங்களை விற்பதற்காக பழங்களை எடுத்துக்கொண்டு, மேட்டூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள பூக்கடை முன்பு, மாலை 5 மணி அளவில் ரோட்டின் ஓரமாக நடந்து சென்ற போது அவருக்கு எதிரே இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்த எதிரி மோதி விபத்தை ஏற்படுத்தியதாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

b) மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக காவல்துறையினரால் விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 கண்ணன் என்பவர் தான் இந்த வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்ற விதமாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், காவல்துறையினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யும்போது சாட்சிகளாக இருந்ததாகவும் கூறி விசாரிக்கப்பட்ட அ.சா.3 மோகன் மற்றும் அ.சா.4 நாச்சிமுத்து ஆகிய இருவரும், மேற்படி சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், பார்வை மகசரில் உள்ள கையெழுத்து மட்டும்தான் தங்களுடையது என்றும், மற்றபடி எந்த விவரமும் தங்களுக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளனர்.

c) எனவே, இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விபத்து எவ்வாறு, யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதற்கு அ.சா.1 சரோஜா என்பவரைத் தவிர வேறு எந்த நேரடிச் சாட்சிகளும் அரசு தரப்பில் இல்லை. மேலும், மேற்படி சரோஜா என்பவர் தான் சாலையின் எந்தப் பகுதியில் சென்றார்

என்பதையும், இடது பக்கத்திலோ அல்லது வலது பக்கத்திலோ சென்றார் என்பதையும் குறிப்பிட்டுச் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், எதிரி ஓட்டி வந்த வாகனம் எந்தத் திசையில் இருந்து வந்தது என்பதையும் குறிப்பிட்டு இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி வேகமாக இருசக்கர வாகனத்தில் வந்து மோதிவிட்டதாக மட்டுமே இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், எதிரி எந்த விதத்தில் கவனக்குறைவாகச் செயல்பட்டு இந்த விபத்துக்குக் காரணமாக இருந்தார் என்பதற்கான எந்த விவரங்களையும் மேற்படி அ.சா.1 சரோஜா குறிப்பிட்டு இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், இந்த வழக்கு சம்பந்தப்பட்ட புகாரில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளன என்பது தனக்குத் தெரியாது என்றும், அது பற்றிப் போலீஸாருக்குத்தான் தெரியும் என்றும் குறுக்கு விசாரணையில் தெரிவித்துள்ளார். ஆகவே, மேற்படி சரோஜா என்பவரின் சாட்சியம், இந்த விபத்து எதிரியின் கவனக்குறைவால்தான் நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் அளவுக்குப் போதுமானதாக இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

d) ஆகவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், இந்த விபத்து எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால்தான் நடைபெற்றது என்பதற்கு அரசு தரப்பில் போதிய மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியங்களோ ஆவணங்களோ ஏதும் இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இதன் விளைவாக, எதிரிக்கு எதிரான பாரத நீதிச் சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 125(b) ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகள்

நிரூபணம் செய்யப்படவில்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவு**

ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில், இந்த விபத்து எவ்வாறு யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதற்கு எந்த வித நேரடியான முதல் நிலை சாட்சியங்கள் மற்றும் இரண்டாம் நிலை சாட்சியங்கள் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தாத காரணத்தாலும், இந்த வழக்கில் எதிரி சண்முகம் என்பவர் தனது Scooty Streak **இருசக்கர வாகனத்தை** அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று எலுமிச்சை பழங்களை எடுத்துச் சென்று கொண்டிருந்த காயமடைந்த சரோஜா என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, அதன் காரணமாக அவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தி **பாரத நீதிச் சட்டம் பிரிவுகள் 281, மற்றும் 125(b)** ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல் செய்துள்ளார் என அரசு தரப்பு போதிய சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என தீர்மானித்து இந்த வழக்கில் தீர்வளிக்கப்படவேண்டிய எழுவினாவிற்கு அரசு தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடை அளிக்கிறது.

முடிவாக, இந்த வழக்கின் எதிரி சண்முகம் **பாரத நீதி சட்டம் பிரிவுகள் 281 மற்றும் 125(b)** ஆகியவற்றின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 271(1) ன் கீழ்** இந்த நீதிமன்றம் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. மேலும் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு பிணையாளர்கள் வழங்கிய பிணைப் பத்திரங்களை இரத்து செய்தும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் ஜூலை மாதம் 16–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN Date: 2026.07.16 18:13:42 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ. சா. 1 | சரோஜா | புகார்தாரர் |
| அ. சா. 2 | கண்ணன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ. சா. 3 | மோகன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ. சா. 4 | நாச்சிமுத்து | பார்வை மகஜர் சாட்சி |
| அ. சா. 5 | செந்தில்குமார் | புலனாய்வு அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை | அ.சா.1 |
| அ. சா. ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து | அ.சா.3 |
| அ. சா. ஆ.3 | பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து | அ.சா.4 |
| அ. சா. ஆ.4 | புகார் வாக்குமூலம் | அ.சா.5 |
| அ. சா. ஆ.5 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ. சா. ஆ.6 | பார்வை மகஜர் | அ.சா.5 |

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.7 | மாதிரி வரைப்படம் | அ.சா.5 |
| அ. சா. ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 |
| அ. சா. ஆ.9 | போலீஸ் இண்டிமேசன் | அ.சா.5 |
| அ. சா. ஆ.10 | மேட்டூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு | அ.சா.5 |
| அ. சா. ஆ.11 | மேட்டூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச் சான்றிதழ் | அ.சா.5 |
| அ. சா. ஆ.12 | அந்தியூர் பாலாஜி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு | அ.சா.5 |
| அ. சா. ஆ.13 | அந்தியூர் பாலாஜி மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச் சான்றிதழ் | அ.சா.5 |
| அ. சா. ஆ.14 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 |

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.16 18:13:13 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1 ,மேட்டூர்.**

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:–**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.



N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1 ,
மேட்டூர்
16.07.2026